| | | | |
|---|---|---|---|
| 22.03.2022 | அசல் வழக்கு எண்.126/2019 | வா.சா.3 | திரு.கிருஷ்ணசாமி<br>த/பெ.பாப்பண்ணன் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்)</u>

வாதி ஈஸ்வரன் எனது உறவினர் அல்ல. தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கும் பிரபாகரனை யார் என்று எனக்கு தெரியாது. பிரபாகரன் தான் பிரதிவாதிக்கு வீடு கட்டி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரபாகரன் எனக்கு யார் என்று தெரியாது. அவ்வாறு வீடு கட்டி கொடுத்த வகையில் பிரதிவாதிக்கும் பிரபாகரனுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது.14.1.2019 அன்று பிரபாகரன் பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. பிரபாகரன் 13 லட்சம் கேட்டு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. அதற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டு ஆங்கிலத்தில் உள்ளதா அல்லது தமிழில் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தமிழில் தான் உள்ளது. என் மகன் கார்த்திக் , ஈஸ்வரன் மற்றும் பிரபாகரன் ஆகியோர் சேர்ந்து தான்போலியாக ஒரு கடனுறுதி சீட்டு தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தவறு. ஈஸ்வரன் தான் பணம் கொடுத்தார். நான் ஈஸ்வரனிடம் வேலைக்கு இருக்கிறேன். போலியாக தயாரித்த கடனுறுதி சீட்டில் தான் நான் சாட்சி கையொப்பம் போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாகவே பணம் கொடுக்கும் போது நான் அருகில் இருந்தேன். நான் சொல்வது பொய் என்றாலும் கடனுறுதி சீட்டில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் கடனுறுதி சீட்டு போலியாக வழக்கறிஞர் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சங்கீதா ஈஸ்வரன் வீட்டிற்கு வந்தார். பணம் வாங்கி கொண்டு கையெழுத்து போட்டு கொடுத்தார். அப்பொழுது நான் அருகில் இருந்தேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளது போல் 20.02.2018 அன்று பிரதிவாதி வாதி ஈஸ்வரன் வீட்டிற்கு வந்தார் என்று சொல்வது பொய் என்றாலும் , அவ்வாறு வரும்பொழுது ஸ்டாம்ப்ம் புரோ நோட்டும் கொண்டு வந்தார் என்றும் கடன் கேட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவை உண்மை தான். அவர்கள் கொண்டு வந்த ஸ்டாம்ப் எல்லாவற்றையும் வாதியிடம் கொடுத்து விட்டு 7,50,000 கடன் கேட்டார் என்று சொல்வது

பொய் என்றால் சரியல்ல. உண்மை தான். வாதி பணத்தை கொடுத்து விட்டு பிரதிவாதியிடம் இருந்து அந்த புரோ நோட்டையும் ஸ்டாம்ப்பையும் பெற்றுக் கொண்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் கார்த்திக் எழுதிய புரோ நோட்டில் பிரதிவாதி கையொப்பம் செய்தார் என பொய்யாக சொல்கிறேன் என்றால், தவறு. நான் சொல்வது உண்மை. ஈஸ்வரன் வீட்டில் வைத்து நானும் என் மகனும் கடனுறுதி சீட்டில் சாட்சி கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரபாகரனுக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே வீடு கட்டியதில் பிரச்சினை இருந்ததால் பிரபாகரன் தான் வழக்கு தாக்கல் செய்யாமல் வாதியை வைத்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் பிரபாகரனை யார் என்றே எனக்கு தெரியாது. பிரதிவாதியிடம் இருந்து முறையற்ற முறையில் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் வாதியும் பிரபாகரனும் சேர்ந்து போலியான கடனுறுதி சீட்டை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் பொய். பிரபாகரன் எந்த வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியிருக்கிறாரோ அதே வழக்கறிஞர் மூலம் தான் இந்த வழக்கையும் தாக்கல் செய்திருக்கிறார். பிரபாகரனை யார் என்றே எனக்கு தெரியாது. ஈஸ்வரன் எனக்கு உறவுமுறை அல்ல. அவர் எனக்கு மேஸ்திரி. ஈஸ்வரனும் பிரபாகரனும் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு சாதகமாக பொய் சாட்சிய ம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்கறிஞர் அலுவலகத்தில் தயாரித்த பிரமாண வாக்குமூலத்தில் தான் நான் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றாலும் அதிலுள்ள விபரங்கள் எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சங்கீதா ஈஸ்வரன் வீட்டிற்கு வரவும் இல்லை, வந்து கடன் பெறவும் இல்லை , கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவும் இல்லை என்றாலும், அவ்வாறு நடந்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha,**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM